RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 212 | ஆகஸ்டு.4 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## “நான் திமுக உடன் கூட்டணி வைக்கவோ, இணையவோ மாட்டேன்” ஓபிஎஸ் விளக்கம்



சென்னை: ஆக.4-

“நான் திமுக உடன் கூட்டணி வைக்கப் போவதாகவும், அக்கட்சியில் இணையப் போவதாகவும் பரவும் தகவலில் எள்ளளவும் உண்மையில்லை” என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அண்மையில் முதல்வர் ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்தார் ஓபிஎஸ். அதோடு தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகுவதாக ஓபிஎஸ் தலைமையிலான அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு அறிவித்தது. அடுத்த ஆண்டு தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இது அரசியல் ரீதியாக பேசு பொருளானது. இது குறித்து திமுக கூட்டணி கட்சிகள் மற்றும் அதிமுக, பாஜக கூட்டணி கட்சியினர் தங்களது கருத்தை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், இன்று (ஆக.4) ஓபிஎஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், “மருத்துவமனையில் சிகிச்சை பெற்று இல்லம் திரும்பியவர்களை அவர்களது இல்லம் தேடிச் சென்று நலம் விசாரிப்பதும், உயிரிழந்தவர்களின் உறவினர்களை சந்தித்து துக்கம் விசாரித்து அஞ்சலி செலுத்துவதும் தமிழ்ப் பண்பாடு.

இந்த வகையில், முதல்வர் ஸ்டாலின் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பல்வேறு சிகிச்சைகளுக்குப் பிறகு பூரண குணமடைந்து இல்லம் திரும்பிய நிலையில், அவரது வீட்டிற்கு நேரில் சென்று நலம் விசாரித்தேன். இதேபோன்று அவரது மூத்த சகோதரர் மு.க.முத்து மறைவு குறித்து இரங்கல் தெரிவித்தேன்.

இந்தச் சந்திப்பு தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்பாடு. என்னுடைய மனைவியும், என்னுடைய தாயாரும் இறந்தபோது, என்னை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியவர் முதல்வர் ஸ்டாலின் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சந்திப்பில் எவ்வித அரசியலும் இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இந்தச் சந்திப்பை வைத்து என்னை திமுகவின் ‘பி’ டீம் (ஙி ஜிமீணீனீ) என்றும், நான் திமுக உடன் கூட்டணி வைக்கப் போவதாகவும், திமுகவில் இணையப் போவதாகவும் பல்வேறு வதந்திகளை சமூக வலைதளங்கள் வாயிலாக பரப்பும் நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களும் இதுகுறித்த செய்திகளை கற்பனையாக வெளியிட்டு வருகின்றன. இதில் எள்ளளவும் உண்மையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் மற்றும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா வழியில் பயணிப்பவன். 2026ம் ஆண்டு நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சியை அமைக்க வேண்டுமென்பதுதான் எங்களின் நோக்கம் என்பதையும், அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதையும் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தும் வகையில் நான் முதல்வர் ஸ்டாலினை சந்தித்தேனே தவிர, இதில் துளியும் அரசியல் ஏதுமில்லை. இதனை வைத்து அரசியல் ஆதாயம் தேட நினைப்பவர்களைப் பார்க்கும்போது, முன்னாள் முதல்வர் அண்ணாவின் பொன்மொழியான ‘பண்பு தெரிந்தவர்கள் பாராட்டுகிறார்கள். அது இல்லாதவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்’ என்பதுதான் என் நினைவிற்கு வருகிறது.

அடுத்தபடியாக, சமக்ரா சிக்ஷா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நிதியை நான் ஏதோ இப்போதுதான் வெளியிடுவதுபோல சில விமர்சனங்கள் எழுகின்றன. இது முற்றிலும் தவறு. சமக்ரா சிக்ஷா திட்டத்திற்கான நிதியை விடுவிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி 29082024 அன்றே அறிக்கை வெளியிட்டவன் நான். இதேபோன்று, தந்தை பெரியார் மற்றும் அண்ணாவைப் பற்றி விமர்சித்து பேசிய இந்து முன்னணிக்கு கண்டனம் தெரிவித்து 25062025 அன்று அறிக்கை வெளியிட்டவன் நான்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் விமர்சித்தபோது அதற்கு கண்டனம் தெரிவித்து 12062023 அன்று அறிக்கை வெளியிட்டவன் நான். இதே போன்று, இருமொழிக் கொள்கைக்கு ஆதரவாக என்னுடைய கருத்தை பதிவு செய்து இருக்கிறேன். இஸ்லாமிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வக்பு வாரிய சட்டத்திற்கு எதிராக மாநிலங்களவையில் வாக்களிக்க உத்தரவிட்டேன். நான் எங்கு இருந்தாலும், தமிழக மக்களின் உரிமை, தமிழக மக்களின் நலன் என்று வந்துவிட்டால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வழியில் செயல்படக் கூடியவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று அவர் கூறியுள்ளார்.

## 7வது முறையாக ஆட்சி அமைக்க உறுதியேற்போம்: திமுக தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் அழைப்பு



சென்னை: ஆக.4-

தமிழகத்தில் 7வது முறையாக திமுக ஆட்சி அமைந்திட கருணாநிதி நினைவு நாளில் உறுதியேற்போம் என்று தொண்டர்களுக்கு திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் எழுதியுள்ள கடிதம்: நான்காண்டு கால திமுக ஆட்சியில் நாள்தோறும் மாநில உரிமைகளுக்கான போராட்டம்தான். தமிழகத்தின் உரிமைகளை காத்திடுவதற்காக நாடாளுமன்றத்தில் போர்க்குரல் எழுப்புவதோடு, உச்ச நீதிமன்றத்திலும் சட்டப்போராட்டத்தை நடத்துகிறது திமுக அரசு.

அதற்கான நெஞ்சுரத்தை நமக்குத் தந்திருப்பவர் கருணாநிதிதான். தமிழகத்தின் நலன் மீது கொஞ்சமும் அக்கறையில்லாத அதிமுக, தமிழகத்தை வஞ்சிக்கும் பாஜகவுடன் கூட்டணி சேர்ந்து தமிழர்களுக்கு மிகப் பெரும் துரோகத்தை இழைத்து வருகிறது.

உண்மையான அதிமுக தொண்டர்களே மனம் புழுங்குகிற வகையில், அடிப்படை கொள்கைகள் ஏதுமற்ற எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி டெல்லி வரை சென்று பாஜகவுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறார். சேராத இடந்தன்னில் சேர்ந்து தீராத பழி சுமந்தபடி ஊர் ஊராக பயணித்து, பொய்களைப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்.

இந்தியாவின் முதல் செம்மொழி என்ற தகுதிபெற்ற தமிழுக்கு மிகக் குறைந்த நிதியை ஒதுக்குகிற தமிழர் விரோத பாஜக அரசு, சம்ஸ்கிருத மொழிக்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கொட்டிக் கொடுக்கிறது.

இந்தி அல்லாத மொழிகளைச் சிதைக்கின்ற வகையில் தேசியக் கல்வி கொள்கை2020 மூலம் இந்தி மொழியை திணிக்க முயற்சிக்கிறது. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கின்ற கல்வியை பறிக்கின்ற வகையில் குலக்கல்வி முறையை கொண்டு வரத்துடிக்கிறது.

அறிவியல்பூர்வமாக நிறுவப்பட்ட தமிழர் பண்பாட்டு அடையாளமான கீழடி அகழாய்வு முடிவுகளை பாஜக அரசு வெளியிட மறுக்கிறது. ஆரிய பண்பாட்டை நம் மீது திணிக்க பார்க்கிறது. நாம் பாஜக அரசின் தமிழர் விரோத, மனிதகுல விரோத சூழ்ச்சிகளை எதிர்த்து நிற்கிறோம். எதிர்க்கட்சியாக உள்ள அதிமுகவோ அடங்கி ஒடுங்கி பாஜகவுக்கு சேவகம் செய்து கொண்டிருக்கிறது.

கருணாநிதி வழியில்.. “வீரன் சாவதே இல்லை, கோழை வாழ்வதே இல்லை“ என்றார் கருணாநிதி. திமுகவின் களத்தில் வீரர்களாக நிற்கிறார்கள். தமிழை காக்கவும், தமிழகத்தின் உரிமைகளை மீட்கவும் திமுக என்றென்றும் கருணாநிதி வழியில் உறுதியுடனும் தெளிவுடனும் தன் போராட்டத்தை முன்னெடுக்கும். தமிழ் மக்களின் வளமான வாழ்வுக்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும். என்றென்றும் கருணாநிதி நினைவுகளில் வாழ்கின்ற கோடிக்கணக்கான தொண்டர்களில் உங்களில் ஒருவனான நானும் இருக்கிறேன்.

ஆக.7ம் தேதி கருணாநிதி நினைவு நாளில் தமிழர் வாழும் நிலமெங்கும் அவர் நினைவை போற்றுவோம். வங்க கடற்கரையில் தன் அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள கருணாநிதி நினைவிடம் நோக்கி ஆக.7ம் தேதி நடைபெறும் அமைதி பேரணியில் தொண்டர்கள் கடலென திரண்டு வணக்கத்தை செலுத்துவோம்.

மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுள்ள கருணாநிதி சிலைகளுக்கு அந்தந்த மாவட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மாலையிட்டு மரியாதை செலுத்திட வேண்டும். கிளைதோறும் கருணாநிதியின் நினைவு போற்றப்பட வேண்டும்.

வீடுகளிலும், வீதிகளிலும் தமிழ்காத்த போராளியாம் கருணாநிதி படங்களுக்கு, மலர் தூவி வணக்கம் செலுத்துங்கள். கருணாநிதியின் நினைவுகளை நெஞ்சிலேந்தி, கொள்கைவழி பயணத்தை தொடர்ந்து, 2026 சட்டப்பேரவை தேர்தலில் 7வது முறையாக திமுக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம். ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் மக்களை ஒருங்கிணைத்து களத்தில் வெல்வோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இன்னும் 70 ஆண்டுகள் ஆனாலும் திமுகவுக்கு இனி தமிழகத்தில் இடமே இல்லை: பழனிசாமி கருத்து



சென்னை: ஆக.4-

இன்னும் 70 ஆண்டுகள் ஆனாலும் இனி திமுகவுக்கு தமிழகத்தில் இடமில்லை என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ‘மக்களைக் காப்போம்: தமிழகத்தை மீட்போம்' என்ற பயணத்தை கோவையில் கடந்த ஜூலை 7ம் தேதி தொடங்கினேன். இதுவரை 21 நாட்களில் 14 மாவட்டங்கள், 61 சட்டப்பேரவை தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டுள்ளேன். 3,200 கி.மீ. தூரம் பயணித்துள்ளேன். சுமார் 25 லட்சம் மக்களை சந்தித்து, நேரடியாக உரையாடி அவர்களின் குறைகளை, கோரிக்கைகளை, எண்ணவோட்டங்களைக் கேட்டறிந்தேன். இந்த பயணத்தில் சுமார் 42 மணி நேரத்துக்கும் மேலாக மக்களிடம் உரையாற்றியுள்ளேன்.

எனது பயணத்துக்கு செல்லும் இடமெல்லாம் மக்கள் அளித்து வரும் பேராதரவிலும், அவர்களின் அளவற்ற அன்பிலும் மிகுந்த மகிழ்ச்சியுற்றேன். எனது பயணத்தில் பொதுமக்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளர்கள், தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோரைச் சந்தித்தேன். அப்போது, அவர்கள் அனைவரும், ஸ்டாலின் அரசால் தாங்கள் படும் துயரங்களையும், தங்கள் குறைகளையும், எங்களிடமிருந்து அவர்கள் எதிர்பார்க்கும் திட்டங்களையும் என்னிடம் தெரிவித்தனர்.

போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த இந்த அரசு முற்றிலும் தவறியதால் திருட்டு, கொலை, பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்துள்ளன. அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த நல்ல திட்டங்களைத் தொடர முடியாமல், ஆளத்தெரியாத திமுகவுக்கு 7வது முறையாக அல்ல, இன்னமும் 70 ஆண்டுகள் ஆனாலும் இனி தமிழகத்தில் இடமே இல்லை.

அதிமுக வாக்குறுதி: இந்த அலங்கோல ஆட்சி மீது தமிழக மக்கள் கடும் கோபத்துடனும் இருக்கின்றனர். இந்த மோசமான திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என மக்கள் முடிவெடுத்துவிட்டார்கள். தமிழக மக்கள் இழந்த அமைதி, வளத்தை மீட்டுத் தருவதுதான் எனது முதல்வாக்குறுதியாக, தமிழக மக்களுக்கு அளித்துள்ளேன். திமுக அரசால் முடக்கப்பட்ட, அதிமுக அரசின் தாலிக்குத் தங்கம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்கள், 2026ல் அதிமுக ஆட்சி அமைந்தவுடன், மீண்டும் செயல்படுத்தப்படும் என்ற வாக்குறுதியை மக்களுக்கு நான் அளித்துள்ளேன்.

மேலும், தீபாவளிக்கு சேலை, தீப்பெட்டி தொழிலுக்கு சவாலாக உள்ள பிளாஸ்டிக் லைட்டர்களுக்கு தடை, சத்துணவுத் திட்டத்தில் கடலை மிட்டாய், 4 ஆயிரம் அம்மா மினி கிளினிக்குகள், காவிரிகுண்டாறு திட்டம், தாமிரபரணி ஸ்ரீ வைப்பாறு திட்டம் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துள்ளேன்.

2026ல் அதிமுக ஆட்சி அமைந்தவுடன் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும். திமுக ஆட்சியால் மக்கள் அடைந்த இன்னல்களை தீர்ப்பது தான் நமது முக்கிய பணி. தொண்டர்கள் மக்களுடன் உறுதியாக நின்று, வீடு வீடாகச் சென்று அவர்களின் குறைகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்து தலைமையிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நயினார் நாகேந்திரன் வீட்டில் பழனிசாமிக்கு விருந்து



திருநெல்வேலி: ஆக.4-

பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வீட்டில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு நேற்று இரவு விருந்து அளிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் ‘மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்’ என்ற பிரச்சாரப் பயணத்தை மேற்கொண்டுள்ள பழனிசாமி நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார். பின்னர் நெல்லை சந்திப்பில் உள்ள ஓட்டலில் இரவு தங்கினார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 220வது நினைவு தினத்தையொட்டி, அவரது படத்துக்கு பழனிசாமி நேற்று காலை மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர், நேற்று இரவு நெல்லையில் உள்ள பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் வீட்டில் பழனிசாமிக்கு 109 வகையான உணவுகளுடன் பிரம்மாண்ட விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பாஜக மற்றும் அதிமுக முன்னணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

மேலும், தேர்தல் வியூகம் மற்றும் பிரச்சாரப் பயணத்தில் பங்கேற்பது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இன்று (ஆக. 4) திருநெல்வேலி, நாங்குநேரி, பாளையங்கோட்டை தொகுதிகளிலும், நாளை முதல் 2 நாட்களுக்கு (ஆக. 5 மற்றும் 6) தென்காசி மாவட்டத்திலும் பொதுமக்களிடையே பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்கிறார். பின்னர் அவர் விருதுநகர் மாவட்டத்துக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

## ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணையமாட்டார்: டிடிவி தினகரன் நம்பிக்கை

சென்னை: ஆக.4-

திமுகவில் ஓ.பன்னீர்செல்வம் இணையமாட்டார் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் வெளியேறியது அதிர்ச்சியாக இருந்தது. அந்த முடிவுக்கு அவர் தள்ளப்பட்டு இருக்கக் கூடாது.

அதற்கு யார் காரணம் என்பது உலகத்துக்கே தெரியும். அவரை மீண்டும் கூட்டணிக்குள் கொண்டுவர டெல்லியில் உள்ள பாஜக தலைவர்கள் முயற்சிக்க வேண்டும். அவருடைய ஆதங்கங்கள் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். நான் அவருடன் தொடர்ந்து பேசிக் கொண்டுதான் இருக்கிறேன் டெல்லி தலைமைக்கும் அதுகுறித்து தெரிவித்துள்ளேன். எதிர்காலத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என ஓபிஎஸ் பேசியதை, அவர் கோபத்தில் பேசியதாக நான் கருதுகிறேன்.

அவர், தன்னை அவமானப்படுத்தி விட்டதாக உணர்ந்து தனது சுயமரியாதை முக்கியம் என்று கருதியதால், கோபத்தில் சில வார்த்தைகளை வெளியிடுகிறார். இதற்கு முன் ஆர்.எம்.வீரப்பன், திருநாவுக்கரசர். சாத்தூர் ராமச்சந்திரன், முத்துசாமி, கண்ணப்பன், ரகுபதி, சேகர்பாபு உள்ளிட்ட பலர் திமுகவுக்கு சென்று இருக்கலாம். அவர்களெல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள்.

ஆனால் ஓ.பன்னீர்செல்வம் 3 முறை முதல்வர் வாய்ப்பு பெற்றவர். என்னை பொறுத்தவரை அவர் திமுகவில் இணைவது என்ற முடிவை எடுக்க மாட்டார். முதல்வரின் உடல்நலம் குறித்து விசாரிக்க சென்றதாகத்தான் தெரிவித்துள்ளார். முதல்வரும் அவர் வந்ததற்கு நன்றி தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சரால்தான் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுப்பெற்று வருகிறது. அவர் போன்ற அனுபவம்மிக்க தலைவர்களும், பன்னீர்செல்வம் வெளியேறுவார் என எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

பன்னீர்செல்வத்தை மீண்டும் எங்கள் கூட்டணியில் கொண்டு வருவதற்கான எல்லா முயற்சிகளையும் டெல்லி மற்றும் தமிழக பாஜக தலைவர்கள் எடுக்க வேண்டும். ஆட்சி அதிகாரம், பொருளாதாரத்தை தூக்கி எறிந்துவிட்டு என்னோடு நிற்கும் தொண்டர்கள், தேர்தலில் வெற்றி, தோல்விகளை எல்லாம் தாண்டி என்னோடு பயணிக்கிறார்கள். இவர்களின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்பதான் செயல்படுவேன். ஜெயலலிதாவுக்கு இழுக்கு ஏற்படும் வகையில் அரசியல் செய்யக்கூடியவன் அல்ல. இவ்வாறு கூறினார்.



தாம்பரம் மத்திய பகுதி கழகம் சார்பில் மேற்கு தாம்பரம் முத்துரங்க பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள

# அருள்மிகு ஸ்ரீ நாகேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி

தாம்பரம், ஆக.04-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மத்திய பகுதி கழகம் சார்பில் மேற்கு தாம்பரம் முத்துரங்க பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நாகேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஆடி திருவிழாவை முன்னிட்டு சனிக்கிழமை மதியம் 12 மணி அளவில் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ஏ.லட்சுமி ஆதிமூலம் மற்றும் தாம்பரம் மத்திய பகுதி கழக பொருளாளர் ஏ.கோபிநாத் ஆகியோர் ஏற்பாட்டில் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லப்பாக்கம் ச.ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற தலைவர் டி.கே.எம் சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து மாபெரும் அன்னதானத்தை தொடங்கி வைத்தனர் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன், கழக்கு பகுதி செயலாளர் கூத்தன், மேற்கு பகுதி செயலாளர் ஏ.கோபிநாதன், பகுதி பிரதிநிதி மார்க்கெட் காசி, மார்க்கெட் பாபு 49வது வடக்கு வட்ட கழக செயலாளர் வி.பாலாஜி, மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் எஸ்.மாரி, மாவட்ட மாணவர் அணி துணைச் செயலாளர் தில்லை ராஜ், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் ரகு, வட்டச் செயலாளர் செந்தில்குமார் மோகன், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் இணைச் செயலாளர் செந்தில்குமார், வட்டக் கழகச் செயலாளர் ஜேசுராஜ் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிற நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள், மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்

# தாம்பரம் சீயோன் மற்றும் ஆல்வின் பள்ளிகளின் விளையாட்டு விழா

## கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் என். விஜயன் தலைமையில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள்



தாம்பரம், ஆக.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சீயோன் மற்றும் ஆல்வின் பள்ளிகளின் விளையாட்டு விழா கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் என். விஜயன் தலைமையில், மப்பேடு சீயோன் சர்வதேச பொதுப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

சீயோன் சர்வதேச பொது பள்ளியின் 8வது விளையாட்டு விழாவில் தேசிய துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை நித்திலா ஐ வி டார்லிங் சிறப்பு விருந்தினராக பங்கேற்று ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தார்.

ஆல்வின் நினைவுக் பொது பள்ளியின் 16வது விளையாட்டு விழாவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை மேலாளர் எம். முருகு வேந்தன் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தி மாணவர்களிடம் பேசுகையில் தமிழ்நாடு அரசு விளையாட்டு துறையை மேம்படுத்தி வீரர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. மாணவர்களிடம் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதமாக புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. உலக அரங்கில் நமது வீரர்கள் வெற்றி பெற தேவையான பயிற்சிகளை வழங்கி வெற்றி பெறுபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கி அவர்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது இதனை மாணவர்கள் தகுந்த முறையில் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும் என்று கூறினார்.

சீயோன் மற்றும் ஆல்வின் கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் என். விஜயன் பேசுகையில் நமது கல்வி குழுமத்தில் கல்வியுடன், விளையாட்டிலும் தனி கவனம் செலுத்தி மாணவர்களுக்கு சிறந்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களை கொண்டு அவர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். சர்வதேச தரத்திற்கு இணையான விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு அவர்களுக்கு பயிற்றி அளிக்கப்படுவதால் அவர்கள் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற முடிகிறது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று நமது பள்ளிக்கும், தமிழக அரசுக்கும் பெருமை சேர்க்கும் மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளையும், ஊக்கத்தையும் நாங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம் இதனை மாணவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

விளையாட்டு விழாவில் கல்வி குழுமங்களின் துணைத் தலைவர் வி.ஆல்டஸ் ஹக்ஸ்லி, நிர்வாக இயக்குநர் ரேச்சல், ஆலோசனை குழு உறுப்பினர்கள் கேப்டன் மூர்த்தி, கல்வி ஆலோசகர் ஜெயந்தி சிவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




# ஆணவக் கொலை செய்யப்பட்ட ஐடி ஊழியரின் பெற்றோருக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு

நெல்லை, ஆக.04-

தூத்துக்குடி மாவட்டம், பிரையண்ட் நகரைச் சேர்ந்த சந்திரசேகர், தமிழ்செல்வியின் மூத்த மகன் ஐடி ஊழியர் கவின் செல்வகணேஷ் (27), காதல் விவகாரத்தில் கடந்த 27ம் தேதி நெல்லை கேடிசி நகரில் ஆணவக் கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து பாளை போலீசார் வழக்கு பதிந்து அவரது காதலியான சுபாஷினி தம்பி சுர்ஜித்தையும், தந்தை எஸ்ஐ சரவணனையும் கைது செய்தனர். கவின் தந்தை சந்திரசேகர், இன்ஸ்பெக்டர் காசிப்பாண்டியன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை கூறினார்.

இந்நிலையில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம் என அரசியல் கட்சி தலைவர்கள், சமூக அமைப்புகள் அவருக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என அரசை வலியுறுத்தினர். இதையடுத்து ஏரல் ஆறுமுகமங்கலத்தில் உள்ள சந்திரசேகர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.



# காரைக்குடியில் திருக்குறள் பயிற்சி வகுப்பு துவக்க விழா

காரைக்குடி, ஆக.04-

உலகத் திருக்குறள் கூட்டமைப்பு சார்பில் முத்துப்பட்டணம் நகர்மன்ற தொடக்கப் பள்ளியில் இலவச திருக்குறள் பயிற்சி வகுப்பு துவக்க விழா நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் இலக்கிய மாமணி மெய்யாண்டவர் தலைமை தாங்கினார். கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரும் இந்த அமைப்பின் துணைத்தலைவருமான சந்திரமோகன் சிறப்புரை ஆற்றினார். மாணவர்களுக்கு திருக்குறள் புத்தகத்தை வழங்கி சிறப்பித்தார். துணைத்தலைவர் மற்றும் முத்துப்பட்டணம் பள்ளி தலைமையாசிரியர் ஹேமலதா வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் மற்றும் கல்லல் முருகப்பா பள்ளி லட்சிய ஆசிரியர் பிரபு வாழ்த்துரை வழங்கினார். பொருளாளர் சுவேதா ஜீவானந்தம் வாழ்த்துரை வழங்கி மாணவர்களுக்கு பரிசுப் பொருள் வழங்கி உற்சாகப்படுத்தினார். காரைக்குடி மகரிஷி பள்ளி ஆசிரியர் சத்தியமூர்த்தி குறள் படிப்பதன் முறையை எளிமையாக விளக்கினார். உலகத் திருக்குறள் கூட்டமைப்பின் சிவகங்கை மாவட்ட இயக்குநர் நல்லாசிரியர் வனிதா வந்திருந்த அனைத்து மாணவர்களுக்கும் பயிற்சி அளித்ததுடன் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

ஆசிரியர் விக்டோரியா நன்றி கூறினார். ஆசிரியர்கள் தமயந்தி கோகிலா மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து அனைத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கும் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை இதே பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமர்நாத் யாத்திரை முன்கூட்டியே நிறைவு



காஷ்மீர், ஆக.04-

காஷ்மீரில் மழையால் வழித்தடங்கள் சேதம் காரணமாக அமர்நாத் யாத்திரை முன்கூட்டியே நிறைவு பெற்றது. நடப்பாண்டு அமர்நாத் யாத்திரை ஒரு வாரத்துக்கு முன்பே முடித்து கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 4.10 லட்சம் பக்தர்கள் அமர்நாத் யாத்திரை மேற்கொண்டு பனிலிங்கத்தை தரிசித்துள்ளனர்

# தாம்பரம் மாநகராட்சி, 4-வது மண்டலம், 51, 52 ஆகிய வட்டங்களில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்




தாம்பரம், ஆக.04-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்கான சிறப்பு முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 4வது மண்டலம், 51 - 52 ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் பா.லிங்கேஸ்வரி, எல்.பெரியநாயகம், வட்ட செயலாளர் ஸ்ரீதர்குமார் (எ) பாபு, பெருங்களத்தூர் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் கா.மு.சூர்யா பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பொது மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டனர்



# முதல்கட்ட சுற்றுப்பயணம் தொடங்கினார் பிரேமலதா: ஆவடி, திருத்தணி தொகுதிகளில் பிரச்சாரம்

திருவள்ளூர், ஆக.04-

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தனது முதற்கட்ட சுற்றுப்பயணத்தை நேற்று கும்மிடிப்பூண்டியில் தொடங்கினார்.

முன்னதாக, கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் விநாயகர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். 'உள்ளம் தேடி' 'இல்லம் நாடி', 'கேப்டனின் ரதயாத்திரை' 'மக்களை தேடி மக்கள் தலைவர்' ஆகிய பெயர்களில் தொடங்கப்பட்டுள்ள இந்த பயணத்தில், விஜயகாந்த் தேர்தல் பிரச்சாரத்துக்காக பயன்படுத்தும் வாகனத்தில் சென்று பிரச்சாரம் செய்தார்.

ஆரம்பாக்கம், எளாவூர், கும்மிடிப்பூண்டி, கவரைப்பேட்டை, மாதர்பாக்கம், பாலவாக்கம், சீத்தஞ்சேரி உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில் சாலையில் நடந்து சென்று மக்களை சந்தித்தார். அப்போது, அவர் தேநீர் கடை ஒன்றில் தேநீர் அருந்தினார். வழிநெடுகிலும் ஆயிரக்கணக்கான தேமுதிக தொண்டர்கள் தங்கள் கட்சி கொடியை ஏந்தி வரவேற்றனர். பிரச்சாரத்தின்போது பிரேமலதா பேசியதாவது: இந்த சுற்றுப்பயணம் ஆடிப் பெருக்கு நாளில் தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே, இனி தேமுதிக தொடர்ந்து வெற்றியை பெறும். தேமுதிக இடம் பெறும் கூட்டணி, வரும் தேர்தலில் மகத்தான வெற்றியை பெறும். தேமுதிகவின் கொள்கை, லட்சியங்களை நிறைவேற்றும் கூட்டணியில் தேமுதிக அங்கம் வகிக்கும். எளாவூர் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியில் அடிப்படை வசதிகள் இல்லை. குடிநீருக்கான ஏரிகள் தூர்வாரப்படாமல், போதிய நீர் இல்லாமல் உள்ளன. பாலியல் வன்கொடுமைகள், ஆணவக் கொலைகள், சங்கிலி பறிப்பு, கஞ்சா புழக்கம் தலைவிரித்தாடுகிறது. இப்பிரச்சினைகளை தேமுதிக கூட்டணி தீர்க்கும். இவ்வாறு அவர் பேசினார். இந்த சுற்றுப்பயணத்தில் தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், இளைஞரணி செயலாளர் விஜயபிரபாகரன் உள்ளிட்டோரும் பங்கு பெற்றனர். இன்று ஆவடி, திருத்தணி தொகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

# ஆடிப்பெருக்கையொட்டி சிவகாசியில் 2026 காலண்டர் உற்பத்தி தொடக்கம்: ஆர்டர்கள் அதிகரிப்பால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி




சிவகாசி, ஆக.04-

ஆடிப் பெருக்கையொட்டி சிவகாசியில் உள்ள அச்சகங்களில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு 2026ம் ஆண்டுக்கான காலண்டர் ஆல்பம் வெளியிடப்பட்டது.

சட்டப்பேரவை தேர்தல் வர உள்ளதால் அரசியல் கட்சிகளின் ஆர்டர்கள் அதிகம் வருவதால் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சிவகாசியில் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலுக்கு அடுத்தபடியாக அச்சுத்தொழில் பிரதானமாக உள்ளது. சிவகாசியில் உள்ள 150க்கும் அதிகமான அச்சகங்களில் நோட்டுப் புத்தகங்கள், டைரிகள், காலண்டர்கள் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. இதில் 50க்கும் அதிகமான அச்சகங்கள் பிரத்யேகமாக காலண்டர் தயாரிப்பில் மட்டும் ஈடுபட்டுள்ளன.

இங்கு ஆண்டு தோறும் ஆடிப்பெருக்கு தினத்தில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு, அடுத்த ஆண்டுக்கான காலண்டர் ஆல்பம் வெளியிடப்படுவது வழக்கம். அதன்படி நேற்று ஆடிப்பெருக்கையொட்டி சிவகாசியில் உள்ள அச்சகங்களில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டு 2026ம் ஆண்டுக்கான காலண்டர் ஆல்பம் வெளியிடப்பட்டது.

ரூ.25 முதல் ரூ.2,500 வரை பல்வேறு வடிவங்களில் தினசரி காலண்டர்கள், மேஜை காலண்டர்கள், மாத காலண்டர்கள் என 350க்கும் மேற்பட்ட வடிவங்களில் காலண்டர்கள் தயாரிக்கப்பட உள்ளன. 2026ல் சட்டப்பேரவைத் தேர்தல் வருவதால் அரசியல் கட்சிகளின் சின்னங்கள் வடிவிலான 'டை கட்' காலண்டர்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட உள்ளது. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளிலும் காலண்டர்கள் அச்சிடப்படுகின்றன.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் காலண்டர்களை அதிக அளவில் வாங்க ஆர்வம் காட்டி ஆர்டர்களை அளித்து வருகின்றனர். இதனால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து காலண்டர் உற்பத்தியாளர்கள் கூறுகையில், "1996 முதல் 2017ம் ஆண்டு வரை வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட்கள் பட்டியலில் காலண்டர் இருந்தது. ஜி.எஸ்.டி. வரி அமல்படுத்தப்பட்டபோது காலண்டருக்கு 12 சதவீதம் வரி விதிக்கப்பட்டது.

2022ம் ஆண்டு காலண்டருக்கான ஜி.எஸ்.டி. வரி 18 சதவீதமாக உயர்த்தப்பட்டதாலும், மூலப் பொருட்கள் விலை உயர்வாலும் காலண்டர் விலை 35 சதவீதம் உயர்ந்ததால் விற்பனை பாதிக்கப்பட்டது. மக்களவைத் தேர்தல் காரணமாக அரசியல் கட்சியினரின் ஆர்டர்கள் அதிகரிப்பால் 2024ல் காலண்டர் விற்பனை விறுவிறுப்பாக இருந்தது. அதேபோல், அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் வருவதால் அரசியல் கட்சியினரின் ஆர்டர்கள் காரணமாக 30 சதவீதம் விற்பனை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விலையில் பெரிய அளவில் மாற்றம் வர வாய்ப்பில்லை'' என்று கூறினர்.

# 'கூலி'க்கு முன் 'ஏ' சென்சார் சான்றிதழ் பெற்ற ரஜினிகாந்தின் 5 திரைப்படங்கள்

ரஜினிகாந்த் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள படம், 'கூலி'. இந்தப் படத்துக்கு 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது தணிக்கை குழு. இதற்கு முன்பு ரஜினிகாந்தின் 5 படங்கள் 'ஏ' சான்றிதழ் பெற்றுள்ளன.

ரஜினியின் 171வது படமான கூலியில், சத்யராஜ், நாகார்ஜுனா, ஸ்ருதிஹாசன், உபேந்திரா, சவுபின் சாஹிர் என பலர் நடித்துள்ளனர். இந்தி நடிகர் ஆமிர் கான், கவுரவ வேடத்தில் நடித்துள்ளார்.

சன் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்துக்கு, அனிருத் இசை அமைத்திருக்கிறார். ஆக.14ல் ரிலீஸாக இருக்கும் இந்தப் படத்தின் ட்ரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியாகி வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்நிலையில், இந்தப் படத்தைப் பார்த்த தணிக்கை குழு 'ஏ' சான்றிதழ் கொடுத்துள்ளது. அதிக ஆக்ஷன் காட்சிகள் இருப்பதால் இந்த சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சுமார் 36 ஆண்டுகளுக்குப் பிறகு 'ஏ' சான்றிதழ் பெற்ற ரஜினிகாந்தின் படமாக கூலி அறியப்படுகிறது.

கூலிக்கு முன்பு ரஜினிகாந்த் நடிப்பில் 'ஏ' சான்றிதழ் பெற்ற 5 திரைப்படங்கள்:

சிவா (1989) ரஜினிகாந்த், ரகுவரன் உள்ளிட்டோர் நடித்த படம் சிவா. ஆக்ஷன் டிராமாவாக வெளியாகி இருந்தது. இந்தப் படம் இந்தி படத்தின் ரீமேக்.

நான் சிகப்பு மனிதன் (1985) எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் வெளியான படம் நான் சிகப்பு மனிதன். இதில் 'விஜய்' என்ற கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் நடித்திருப்பார். கல்லூரி பேராசிரியர் ஒருவர் ராபின்ஹுட்டாக மாறி சமூக விரோதிகளை வீழ்த்துவது தான் கதை. இது இந்தி படத்தின் ரீமேக்.

நான் மகான் அல்ல (1984) எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் வெளியான படம் நான் மகான் அல்ல. இதில் விஸ்வநாத் என்ற பெயரில் வழக்கறிஞராக ரஜினிகாந்த் நடித்திருப்பார். பழிவாங்கும் படலம் இந்தப் படத்தின் கதை.

புதுக்கவிதை (1982) இது கன்னட படத்தின் ரீமேக். ரொமான்டிக் டிராமா பாணியில் வெளியான இந்தப் படம் ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றது. 'வெள்ளை புறா ஒன்று' பாடல் இந்தப் படத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. இளையராஜா இசை அமைத்திருந்தார். எஸ்.பி.முத்துராமன் படத்தை இயக்கி இருந்தார்.

நெற்றிக்கண் (1981) ரஜினிகாந்த் இரட்டை வேடத்தில் தந்தை, மகனாக நடித்த படம் இது. எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில், விசு வசனம் எழுத, கே.பாலச்சந்தர் திரைக்கதை எழுதி இருந்தார். தந்தை மற்றும் மகனுக்கு இடையில் நடக்கும் மோதல் தான் படத்தின் கதை.



# மைக்கேல் ஜாக்சனின் சாக்ஸ் ரூ.8 லட்சத்துக்கு ஏலம்

கிங் ஆப் பாப் என ரசிகர்களால் கொண்டாடப்பட்ட, இப்போதும் கொண்டாடப்படும் பிரபலம்தான் மைக்கேல் ஜாக்சன். நிறைய இசை ஆல்பங்களை வெளியிட்டவர் இசைக் கச்சேரிகளையும் நடத்தியுள்ளார். 1997ம் ஆண்டு பிரான்ஸில் மைக்கேல் ஜாக்சன் ஒரு இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். அப்போது அவர் பயன்படுத்திய சாக்ஸ் ஒப்பனை அறையில் கிடந்தபோது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பத்திரமாக எடுத்து வைத்துள்ளனர்.

அந்த சாக்ஸ் தற்போது ஏலம் விடப்பட்ட நிலையில் அவரது தீவிர ரசிகர் ஒருவர் அதனை இந்திய ரூபாய் மதிப்பில் ரூ. 8 லட்சத்திற்கு வாங்கியுள்ளார். கடந்த 2009 ஆம் ஆண்டு மைக்கேல் ஜாக்சன் பயன்படுத்திய கையுறை, சுமார் ரூ. 3 கோடிக்கும், அவர் அணிந்திருந்த தொப்பி, கடந்த 2023ம் ஆண்டு சுமார் ரூ. 70 லட்சத்திற்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# போகி சினிமா விமர்சனம்:



ரகசிய கேமராக்களின் மூலம் படமாக்கப்பட்ட பெண்களின் ஆபாச வீடியோக்களை வெளிநாடுகளில் விற்று, கோடிக்கணக்கான ரூபாய் பணம் சம்பாதிக்கும் சமூக விரோத கும்பலை கண்டுபிடிக்கும் பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபடுகின்றனர். அந்த கும்பலை சேர்ந்த சிலரை நபி நந்தி, சரத் கொல்கின்றனர். இதற்கிடையே கல்லூரி மாணவி சுவாசிகாவை 'நான் கடவுள்' ராஜேந்திரன் கும்பல் சீரழித்து கொல்கிறது. இதுபோன்ற வக்கிர ஆசாமிகளை போலீசாரும், நபி நந்தியும் என்ன செய்தனர் என்பது மீதி கதை.

ஒரு உண்மை சம்பவத்தை படமாக்கியுள்ளார் இயக்குனர் எஸ்.விஜயசேகரன். தங்கைக்காகவே வாழும் நபி நந்தி இயல்பாக நடித்திருக்கிறார். தங்கை வேடத்தில் வரும் 'லப்பர் பந்து' சுவாசிகாவின் பரிதாப முடிவு உருக வைக்கிறது. ஒரு பாடல் காட்சிக்கு பூனம் கவுர், சினேகன் நடனமாடி இருக்கின்றனர். மற்றும் சரத், போலீஸ் அதிகாரி வேல.ராமமூர்த்தி, சங்கிலி முருகன், 'நான் கடவுள்' ராஜேந்திரன், எம்.எஸ்.பாஸ்கர், அஞ்சலி வரதராஜன் ஆகியோர் கச்சிதமாக நடித்துள்ளனர்.

மலையின் அழகையும், மற்ற காட்சிகளையும் ஒளிப்பதிவாளர் ராஜா சி.சேகர் யதார்த்தமாக படமாக்கியுள்ளார். மரியா மனோகர் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசை, காட்சிகளின் நகர்வுக்கு உதவியிருக்கிறது. எஸ்.டி.சுரேஷ் குமாரின் வசனம் யதார்த்தமாக இருக்கிறது. அழுத்தமான கதையை கமர்ஷியல் மசாலாவாக சொல்லியிருப்பதால், அதன் வலி மேலோட்டமாகவே இருக்கிறது.



# மர்லின் மன்றோ ஸ்டைலில் ஓவியா: வீடியோ வைரல்

தமிழில் கடந்த 2010ம் ஆண்டு வெளியான களவாணி திரைப்படத்தின் மூலம் கோலிவுட்டில் அறிமுகமானவர் நடிகை ஓவியா. இதைத்தொடர்ந்து இவர் மதயானை கூட்டம், கலகலப்பு, மெரினா, மூடர் கூடம், யாமிருக்க பயமேன் போன்ற படங்களில் நடித்திருந்தார்.

தொடர்ந்து அவருக்கு பெரிய அளவில் படவாய்ப்புகள் அவருக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. சில படங்களில் நடித்து வந்த ஓவியா கடைசியாக யோகிபாபுவுடன் இணைந்து பூமர் அங்கிள் என்ற படத்தில் நடித்திருந்தார். ஓவியா அவரது இன்ஸ்டா பக்கத்தில் ஆக்டிவாக இருந்து கிளாமர் பதிவுகளை பகிர்ந்து வருகிறார். சமீபத்தில் மர்லின் மன்றோ லுக்கில் எடுத்த கிளாமர் வீடியோவை பகிர்ந்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார். தற்போது வின்டேஜ் லுக்கில் பிளாக் அண்ட் ஒயிட்டில் எடுத்த வீடியோவையும் வெளியிட்டார். இது வைரலாகி வருகிறது.

# டிவில்லியர்ஸ் சதம்: பாகிஸ்தானை வீழ்த்தி பட்டம் வென்ற தென் ஆப்பிரிக்கா



வேர்ல்ட் சாம்பியன்ஷிப் ஆப் லெஜண்ட்ஸ் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது தென் ஆப்பிரிக்க அணி. இந்த ஆட்டத்தில் 60 பந்துகளில் அதிரடியாக ஆடி 120 ரன்கள் சேர்த்து அசத்தினார் தென் ஆப்பிரிக்காவின் பேட்ஸ்மேன் ஏபி டிவில்லியர்ஸ்.

இங்கிலாந்தில் கடந்த மாதம் தொடங்கிய இந்த தொடர் நேற்று (ஆக.2) நிறைவடைந்தது. இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் உள்ளிட்ட அணிகள் இதில் பங்கேற்றன. சர்வதேச கிரிக்கெட்டில் அசத்திய முன்னாள் வீரர்கள் இதில் பங்கேற்று விளையாடினர்.

இங்கிலாந்தில் உள்ள பர்மிங்காம் நகரில் நேற்று இந்த தொடரின் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் விளையாடின. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பேட் செய்து 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 195 ரன்கள் எடுத்தது. ஷர்ஜீல் கான் 44 பந்துகளில் 76 ரன்கள் எடுத்தார். உமர் அமீன் 36, ஆசிப் அலி 28, ஷோயப் மாலிக் 20 ரன்கள் எடுத்தனர்.

20 ஓவர்களில் 196 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென் ஆப்பிரிக்கா விரட்டியது. ஹசிம் ஆம்லா மற்றும் ஏபி டிவில்லியர்ஸ் இணைந்து இன்னிங்ஸை ஓபன் செய்தனர். ஆம்லா 18 ரன்களில் ஆட்டமிழந்தார். முதல் விக்கெட்டுக்கு 72 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தது தென் ஆப்பிரிக்கா. பின்னர் ஜே.பி.டுமினி உடன் இணைந்து 125 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்தார் ஏபி டிவில்லியர்ஸ்.

16.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 197 ரன்கள் எடுத்து தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது. டிவில்லியர்ஸ் 60 பந்துகளில் 120 ரன்கள், டுமினி 28 பந்துகளில் 50 ரன்கள் எடுத்தனர். ஆட்ட நாயகன் விருதை டிவில்லியர்ஸ் வென்றார்.

# ஈஸ்போர்ட்ஸ் உலக செஸ்: அலிரெஸாவை வீழ்த்தி கார்ல்சன் சாம்பியன்



சவுதி அரேபியாவில் நடந்த ஈஸ்போர்ட்ஸ் உலகக் கோப்பை செஸ் போட்டியில், உலக நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சன், பிரான்ஸ் கிராண்ட் மாஸ்டர் அலிரெஸா ஃபிரோஸ்ஜாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் ஈஸ்போர்ட்ஸ் உலகக் கோப்பை செஸ் போட்டிகள் நடந்தன. இறுதிச் சுற்றில், நார்வேயை சேர்ந்த உலகின் நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சன், ஈரான் மற்றும் பிரான்ஸ் குடியுரிமை பெற்ற கிராண்ட் மாஸ்டர் அலிரெஸா ஃபிரோஸ்ஜா மோதினர். முதல் செட் போட்டிகளில், கார்ல்சன் அபாரமாக ஆடி முதல் வெற்றியை பதிவு செய்தார்.

தொடர்ந்து இரு போட்டிகள் டிரா ஆனதால், கார்ல்சன், 31 என்ற புள்ளிக் கணக்கில் முன்னிலை வகித்தார். அதன் பின் நடந்த 2வது செட் போட்டிகளில் ஒன்றில் கார்ல்சன் எதிர்பாராத வகையில் தோல்வி அடைந்தார். தொடர்ந்து நடந்த போட்டியில் அபாரமாக ஆடிய கார்ல்சன் வெற்றி வாகை சூடினார். அடுத்ததாக நடந்த போட்டியிலும் கார்ல்சனே வென்றார். கடைசியில், கார்ல்சன், 4 வெற்றி, 2 டிரா, ஒரு தோல்வி கணக்கில் முன்னிலை வகித்தார். அதனால், அபார வெற்றி பெற்ற கார்ல்சன் சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

# கேப்டனாக டான் பிராட்மேனுக்கு அடுத்த இடத்தில் கில்: ஜடேஜாவின் பல அதிரடி சாதனைகள்



இந்தியா இங்கிலாந்து இடையே 5வது டெஸ்ட் போட்டி இருதயத்துடிப்பைப் பாதிக்கும் த்ரில் பினிஷ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தொடரை இந்திய அணி சமன் செய்ய வாய்ப்பு, அதே வேளையில் முதல் டெஸ்ட் போல் இலக்கை இங்கிலாந்து விரட்டி விடவும் வாய்ப்பு உள்ளது.

ஆனால், முதல் டெஸ்ட் பிட்ச் போல் இந்தப் பிட்ச் இல்லை. இந்தப் பிட்சும் கொஞ்சம் அதன் சாரத்தை இழந்திருந்தாலும் இன்னும் கொஞ் சமாகவேனும் சத்து உள்ளது. பிரஷர் போட்டால் இங்கிலாந்தை சுருட்டி தொடரைச் சமன் செய்யலாம்.

ஆனால், இந்தத் தொடரில் பல சாதனைகளை இந்திய அணி செய்துள்ளது. அவை வருமாறு: ஆண்டர்சன் டெண்டுல்கர் டிராபியான இந்தத் தொடரில் இந்திய அணி மொத்தமாக 3,809 ரன்களைக் குவித்துள்ளது. 1989ல் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா இங்கிலாந்துக்கு எதிராக 3,877 ரன்களைக் குவித்த பிறகு இதுதான் அதிகம்.

இந்தத் தொடரில் 8 முறை 300+ ஸ்கோர்களை இந்திய அணி எட்டியுள்ளது. எந்த ஒரு டெஸ்ட் தொடருக்கும் இது அதிக 300+ ரன்களாகும். அதே போல் 350 ரன்களை 8 முறை எடுத்துள்ளது. இதுவும் ஒரு சாதனையே.

ரவீந்திர ஜடேஜா 516 ரன்களை இந்தத் தொடரில் எடுத்துள்ளார். 6ம் நிலையில் இறங்கும் ஒரு வீரர் எடுக்கும் 5வது அதிகபட்ச மொத்த ரன்களாகும் இது. இந்திய பேட்டராகவும் இது ஒரு சாதனை. இதற்கு முன் விவிஎஸ் லஷ்மண் 2002ல் மேற்கு இந்தியத் தீவுகளுக்கு எதிராக இதே டவுனில் இறங்கி 474 ரன்களை எடுத்ததை ஜடேஜா முறியடித்துள்ளார்.

அதே போல் ஜடேஜா 6 முறை 50க்கும் அதிகமான ரன்களை இந்தத் தொடரில் எடுத்து இதே சாதனையைப் புரிந்த நெடும் பட்டியலில் இணைந்தார். அதுவும் 4 அரைசதங்கள் 2வது இன்னிங்ஸில் வந்தது என்பதும் ஜடேஜாவை ஒரு நீள்நெடும் சாதனைப் பட்டியலில் இணைத்துள்ளது.

ஜடேஜாவின் இன்னொரு சாதனைத் துளி இங்கிலாந்து மண்ணில் ஜடேஜாவின் டெஸ்ட் ரன்கள் இதுவரை 1,131 என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது 6ம் நிலையில் இறங்கி எடுத்ததுதான் ஆச்சரியமான சாதனை. கிளைவ் லாய்ட் இதற்கு முன்னர் இதே டவுனில் இறங்கி 1,126 ரன்களை ஒரு தொடரில் எடுத்ததை முறியடித்து விட்டார் ஜடேஜா.

அதே போல் 6ம் நிலை அல்லது அதற்கும் கீழே இறங்கி இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட்டில் 10 அரைசதங்களை எடுத்தவர்களின் அரிதான பட்டியலிலும் ஜடேஜா இணைந்துள்ளார். ஒரு அயல்நாட்டு வீரர் இங்கிலாந்து மண்ணில் இந்த டவுனில் எடுத்த அதிகபட்ச அரைசதங்களாகும் இது. கிளைவ் லாய்ட் ஆஸ்திரேலியாவில் 10 அரைசதங்களை எடுத்துள்ளார். இங்கிலாந்து மண்ணில் 12 அரைசதம் மற்றும் அரைசதம் தாண்டிய ஸ்கோர்களை எடுத்தவர்களில் சச்சின் டெண்டுல்கர் முதன்மையானவர்.

ஷுப்மன் கில் இந்தத் தொடரில் கேப்டனாக பேட்டிங்கில் எடுத்த 754 ரன்கள் டான் பிராட்மேன் கேப்டனாக இங்கிலாந்துக்கு எதிராக 193637ல் எடுத்த 810 ரன்களுக்கு அடுத்த இடத்தில் உள்ள சாதனையாகும். கிரஹாம் கூச் இந்தியாவுக்கு எதிராக 1990 தொடரில் 752 ரன்கள் எடுத்த சாதனையையும் கில் முறியடித்து விட்டார்.

மொத்தம் இந்தியா இந்தத் தொடரில் 422 பவுண்டரிகள் 48 சிக்ஸர்கள் என்று 470 முறை எல்லைக் கோட்டைத் தாண்டி அடித்துள்ளனர். ஒரு டெஸ்ட் தொடரில் இத்தனை பவுண்டரிகள் இதுதான் முதல் முறை. 1993 ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியா 451 பவுண்டரிகள் 9 சிக்ஸர்களுடன் 460 முறை எல்லைக் கோட்டைத் தாண்டி அடித்துள்ளனர்.

இந்திய அணி இந்தத் தொடரில் 12 சதங்களைப் பதிவு செய்துள்ளது. அதே போல் 5 இந்திய வீரர்கள் இந்தத் தொடரில் 400க்கும் அதிகமான ரன்களை எடுத்துள்ளனர். ஜெய்ஸ்வால் நேற்றைய சதத்தின் மூலம் இந்தப் பட்டியலில் இணைந்தார். 1993 ஆஷஸ் தொடரில் 6 ஆஸ்திரேலிய பேட்டர்கள் 400+ ஸ்கோர்களை எடுத்தனர். 196465ல் தென் ஆப்பிரிக்கா வீரர்கள் 5 பேர் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் 400+ ரன்களை எடுத்துள்ளனர். 3 இந்திய பேட்டர்கள் அதாவது, கில், ராகுல் ஜடேஜா 500 ரன்களைக் கடந்துள்ளனர். இதுவும் ஒரு சாதனைத் துளிதான்.

சையத் கிர்மானி (101), அமித் மிஸ்ரா (84) ஆகியோருக்குப் பிறகு ஆகாஷ் தீப் நைட் வாட்ச்மேனாக இறங்கி 66 ரன்களை எடுத்துள்ளார்.




# 25 ஆண்டு கால பாரம்பரியம் கொண்ட கோவை, ஸ்ரீ ஆனந்தாஸ் ஸ்வீட்ஸ் அண்ட் ஸ்நாக்ஸ், தாம்பரத்தில் 22 வது கிளைகள் திறப்புவிழா

தாம்பரம், ஆக.04-

சென்னை அடுத்த தாம்பரத்தில் 25 ஆண்டு கால பாரம்பரியத்தைக் கொண்ட கோயம்புத்தூர் வாசிகளின் மனதை நெருக்கமாக ஸ்ரீ ஆனந்தாஸ் வீட்ஸ் அண்ட் ஸ்நாக்ஸ், கொங்கு பிராந்தியத்தின் சமையல் மரபுகளில் வேரூன்றிய ஸ்ரீ ஆனந்தாஸ் நிறுவனம் தரம் சுவை மற்றும் நம்பகத்தன்மைக்கு இணையற்ற அர்ப்பணி ப்புடன், தினமும் புதிதாக தயாரிக் கப்படும் 200க்கும் மேற்பட்ட வகையான இனிப்புகள், நொறுவைகளை உருவாக்கத்திற்கு புகழ்பெற்றது. அதன் தனித்துவ அடையாளமான பாதாம், ரோஸ் லட்டு முதல் புதுமையான குல்கந்து பிஸ்கட், பெரிதும் விரும் பப்படும் இளநீர் அல்வா வரை, அனைத்தும் கிடைக்கும் வகையில் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டு இருக்கிறது. சென்னையில் புதிய கடை, மறக்க முடியாத தருணங்களை உருவாக்கும் நோக்கத்துடன் பாரம்பரிய நுட்பங்கள், நவீன சுவைகளில் தனித்துவ தலைமையிலான மாஸ்டர் பீசுகளை இந்த நகரத்திற்கு அறிமுகப்படுத்துகிறது. 12 உணவகங்கள் 19 இனிப்பு நொறுவை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுடன் பேக்கரி துறையில் உயர்ந்து நிற்கும் ஸ்ரீ ஆனந்தாஸ் நிறுவனம் சென்னையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கும் பெயராக மாறுவதற்கு தயாராக உள்ளது. ஸ்ரீ ஆனந்தாஸ் ஸ்வீட்ஸ் அண்ட் ஸ்நாக்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர், மணிகண்டன் புருஷோத்தமன் இது குறித்து கூறுகையில், "உணவு, கலாச்சாரத்தை வேறு எந்த ஊருடனும் ஒப்பிட முடியாத, ஆர்வத்துடன் கொண்டாடக்கூடிய நகரம் சென்னை, சென்னையில் ஸ்ரீ ஆனந்தாஸ் நிறுவன கிளைகள் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம் ஒவ்வொரு மகிழ்ச்சி ஆன தருணம் மகிழ்ச்சியான சந்தர்ப்பத்திற்கும் இனிமையை சேர்ந்து உங்கள் குடும்பத்திற்கு ஒரு பகுதியாக மாற நாங்கள் விரும்புகிறோம். எங்கள் தயாரிப்புகள் மூலம் இனிமையான நினைவுகள் உருவாக்குவதே எங்களது நோக்கமாகும். அத்துடன் சென்னையில் சுவை வரைபடத்தில் ஒரு பிரியமான இடத்தை பிடிக்க நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம்" என்றார். உடன் ஸ்ரீ ஆனந்தாஸ், மார்க்கெட்டிங் பிரிவு தலைவர், ஜி. சி. ஷ்யாம் சுந்தர் இதற்கடுத்து இன்னும் சென்னையில் பல கிளைகளை திறக்க உள்ளோம் கூறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மும்பை அகமதாபாத்துக்கு விரைவில் புல்லட் ரயில்: 500 கி.மீ. தூரத்தை 2 மணி நேரத்தில் சென்றடையலாம்

பாவ்நகர், ஆக.04-

மும்பை அகமதாபாத் இடையே விரைவில் புல்லட் ரயில் சேவை தொடங்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா தலைநகர் மும்பை குஜராத்தின் அகமதாபாத் நகரங்களுக்கு இடையிலான புல்லட் ரயில் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2015ம் ஆண்டு அறிவித்தார். 2017 செப்டம்பரில் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கடந்த 8 ஆண்டுகளாக கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. ஜப்பானிய தொழில்நுட்பத்தில் அமைக்கப்படும் புல்லட் ரயில் திட்டத்தின் திட்ட மதிப்பீடு ரூ.2 லட்சம் கோடி ஆகும். மும்பை அகமதாபாத் இடையே 508 கி.மீ. தூரத்துக்கு அதிநவீன தண்டவாளம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வழித்தடத்தில் மொத்தம் 12 ரயில் நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்துக்காக ஜப்பானில் 2 சின்கான்சென் ரக புல்லட் ரயில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் இதன் சோதனை ஓட்டம்நடந்து வருகிறது. இந்த புல்லட் ரயில்கள் மணிக்கு 320 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடியவை. இந்த சூழலில், குஜராத்தின் பாவ்நகர் ரயில் முனையத்தில் நேற்று நடைபெற்ற விழாவில், புல்லட் ரயில் திட்டம் தொடர்பான தகவல்களை மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டார்.



அவர் கூறியதாவது: நாட்டின் முதல் புல்லட் ரயில் சேவை, மும்பை அகமதாபாத் இடையே விரைவில் தொடங்கப்படும். இதற்கான கட்டுமான பணிகள் அதிதீவிரமாக நடைபெற்று வருகின்றன. புதிய புல்லட் ரயிலில் மும்பையில் இருந்து அகமதாபாத்துக்கு 2 மணி நேரம் 7 நிமிடங்களில் செல்ல முடியும்.

பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில் ரயில்வே திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த 11 ஆண்டுகளில் 34,000 கி.மீ. தூரத்துக்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் 1,300 ரயில் நிலையங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. வந்தே பாரத், அம்ருத் பாரத் எக்ஸ்பிரஸ், நமோ பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 8 அம்ருத் பாரத் ரயில் களின் சேவை தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த ரயில்களில், வந்தே பாரத் ரயில்களுக்கு இணையான வசதிகள் உள்ளன. ஆனால், கட்டணம் மிக குறைவு.

படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் சேவை செப்டம்பரில் தொடங்கப்படும். இந்த ரயில்களில் 16 பெட்டிகள் இருக்கும். ஒரு ரயிலில் 1,128 பேர் பயணம் செய்ய முடியும். படுக்கை வசதி கொண்ட புதிய வந்தே பாரத் ரயில்கள் எந்தெந்த வழித்தடங்களில் இயக்கப்படும் என்பதை ரயில்வே வாரியம் முடிவு செய்யும். இந்த ரயில் மணிக்கு 180 கி.மீ. வேகத்தில் இயக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஜப்பானில் இருந்து சரக்கு கப்பல் மூலம் புல்லட் ரயில்கள் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட உள்ளன. விரைவில் இந்தியாவில் புல்லட் ரயில்களின் சோதனை நடைபெறும். புல்லட் ரயில்களின் இயக்கம், பராமரிப்பு தொடர்பாக இந்திய குழு ஜப்பானில் முகாமிட்டுள்ளது. 360 ரயில்வே ஊழியர்கள், ஜப்பானில் பயிற்சி பெற உள்ளனர். 80 சதவீத கட்டுமான பணிகள்முடிந்துள்ளன. எஞ்சிய 20 சதவீதபணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, புல்லட் ரயில் சேவை தொடங்கப்படும் என்று ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.




# சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் வானவில் மன்ற மீளாய்வுக் கூட்டம்

காரைக்குடி, ஆக.04-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நேஷனல் பயர் மற்றும் சேப்டிக் கல்லூரி கூட்டரங்கில் ஜூலை 2025 வேலை அறிக்கை சமர்ப்பிக்கும் மீளாய்வுக் கூட்டம் மற்றும் ஆகஸ்டு செப்டம்பர் மாத கணிதம் மற்றும் அறிவியல் பரிசோதனைகளை செய்துகாட்டும் செய்முறை பயிற்சியும் நடத்தப்பட்டது. கல்வியியலாளர் முனைவர் வசந்திதேவி அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. வானவில் மன்கூஷ கருத்தாளர் பாண்டிச்செல்வி வரவேற்றார். ஆரோக்கிய உபகுழு மாநில ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அனுரத்னா பயிற்சியை துவக்கி வைத்து வழிகாட்டுதல்களை வழங்கினார்.



அமைப்புசார் வானவில் மன்ற ஒருங்கிணைப்பாளர் மாலா பயிற்சியை ஒருங்கிணைப்பு செய்து முக்கிய தகவல் களைக் கூறினார். இணை ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி வானவில் மன்ற கருத்தாளர்களின் கடமைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். வானவில் மன்ற கருத்தாளர் இதயம் செயல்படும் விதம் பகா எண்களை கண்டறிவது போன்ற கணிதம் மற்றும் அறிவியல் பரிசோதனைகளை செய்து காட்டி கூடுதல் தகவல்களைக் கூறினார். அனைத்துக் கருத்தாளர்களும் அறிவியல் ஆய்வுகளை செய்து பார்த்தனர். வேலை அறிக்கை முன் பயண அட்டவணை மற்றும் வேலை அறிக்கை தொகுப்பு போன்ற படிவங்கள் ஒப்படைக் கப்பட்டது.

பிற்பகல் 3:00 மணியளவில் குழந்தைகள் அறிவியல் மாநாட்டிற்காக ஆய்வுகளைச் செய்யும் பள்ளிக் குழந்தைகளை வழிகாட்டும் பள்ளி ஆசிரியர் களுக்கு உதவுவதற்காகவும் கருத்தாளர்கள் குழந்தைகளை வழிகாட்டவும் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆகஸ்டு 6, 9 தேதிகளில் அனுசரிக்கப்பட உள்ள ஹிரோஷிமா நாகஷாகி தின நிகழ்வுகளை நினைவுகூறும் விதமாக மாவட்டத் துணை செயலாளர் ராஜூ உலகினை அளிக்கும் யுத்தமே வேண்டாம் வேண்டும் சமாதானம் என்ற பாடலை பாடுவதற்கான பயிற்சியை அளித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க பொறுப்பாளர்கள் பிரபு முனைவர் முனியப்பன் வாழ்த்துரை வழங்கினர். கருத்தாளர் தனலெட்சுமி நன்றி கூறினார். ஒருங்கிணைப்பாளர்கள், வானவில் மன்றம், மதுரை மாவட்டம்.

# கிளாட் நுழைவுத்தேர்வு: அக்.31க்குள் விண்ணப்பிக்க வேண்டும்

சென்னை, ஆக.04-

தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களில் 2026-27ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான கிளாட் நுழைவுத் தேர்வுக்கு அக்டோபர் 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நம்நாட்டில் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் 25 தேசிய சட்டப் பல்கலைக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் இளநிலை, முதுநிலை சட்டப் படிப்புகளில் சேருவதற்கு கிளாட் (Common Law Admission Test-CLAT) எனும் பொது சட்ட நுழைவுத்தேர்வில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும். மேலும், பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களும் கிளாட் தேர்வு மதிப்பெண்களை அடிப்படையாக கொண்டு மாணவர் சேர்க்கையை நடத்துகின்றன. இந்நிலையில், 2026-27ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான கிளாட் நுழைவுத் தேர்வு டிசம்பர் 7ம் தேதி மதியம் 2 முதல் 4 மணி வரை நடத்தப்பட உள்ளது. இதற்கான இணையதள விண்ணப்பப் பதிவு தற்போது தொடங்கியுள்ளது. இதையடுத்து விருப்பமுள்ளவர்கள் இந்த தேர்வில் பங்கேற்க அக்டோபர் 31ம் தேதிக்குள் /consortiumofnlus.ac.in/ என்ற இணையதளம் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணமாக பொதுப் பிரிவினர் ரூ.4000ம், எஸ்சி/எஸ்டி பிரிவினர் ரூ.3500ம் செலுத்த வேண்டும். விண்ணப்பிக்கும் வழிமுறைகள் உள்பட கூடுதல் தகவல்களை மேற்கண்ட வலைத்தளத்தில் அறிந்து கொள்ளலாம் என்று தேசிய சட்ட பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



# தூத்துக்குடி புதிய ஏர்போர்ட் செயல்பாட்டிற்கு வந்தது

தூத்துக்குடி, ஆக.04-

தூத்துக்குடி விமானநிலையம் ரூ.452 கோடி செலவில் 886 ஏக்கர் பரப்பளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த விமான நிலையத்தில் 3 ஆயிரத்து 115 மீட்டர் நீளம் கொண்ட ரன்வே, இரவு நேரத்தில் விமானம் தரையிறங்குவதற்கான வசதிகள், ஒரே நேரத்தில் ஐந்து ஏ321 ரக விமானங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதனை பிரதமர் நரேந்திரமோடி கடந்த மாதம் 26ம் தேதி துவக்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து புதிய முனையத்தில் இருந்து விமானங்களை இயக்குவது, பயணிகள் முனைய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான பணிகள் நடந்து வந்தன. பயணிகளின் உடைமைகளை ஸ்கேன் செய்வதற்கான எந்திரங்கள், செக் இன் கவுண்டர்களில் தேவையான வசதிகள், ஆட்களை பரிசோதனைக்கான கூடத்தில் ஸ்கேன் வசதி உள்ளிட்டவை அமைக்கப்பட்டு வந்தன.

இந்த பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று காலை புதிய முனையம் வழியாக போக்குவரத்து துவங்கியது. சென்னையில் இருந்து தூத்துக்குடி வந்த முதல் விமானத்தின் பயணிகளுக்கு மலர் கொடுத்தும், இனிப்புகள் வழங்கியும் வரவேற்பு அளிக்கப்பட்டது. தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு புறப்பட்ட பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கி வழியனுப்பி வைத்தனர்.

# உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர் பதவிக்கு 4,398 பேர் விண்ணப்பம்

## ஆட்சியர் தலைமையிலான குழு விரைவில் பரிசீலனை

சென்னை, ஆக.04-

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர் பதவிக்கு 4,398 பேர் விண்ணப்பித்துள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். மாற்றுத்திறனாளிகள் குரல் உள்ளாட்சி அமைப்புகளில் ஒலிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழக சட்டப்பேரவையில் ஊராட்சிகள் சட்டம் 1994, தமிழ்நாடு நகர்ப்புற ஊராட்சிகள் சட்டம் 1998 ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நகர்ப்புற உள்ளாட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் மாற்றுத்திறனாளி ஒருவரை நியமன உறுப்பினர்களாக நியமனம் சட்டமுன்வடிவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஒருமனதாக தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதன்படி, நகர்ப்புற உள்ளாட்சிகளை பொறுத்தவரை ஒரு மாநகராட்சி மன்றத்திற்கு ஒரு மாற்றுத்திறனாளி, நகர் மன்றத்திற்கு ஒரு மாற்றுத்திறனாளி, உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாற்றுத்திறனாளி



உறுப்பினரை நியமிப்பது சட்டமாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 13,357 மாற்றுத்திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இப்போது, உடனடியாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 650, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2,984 மாற்றுத்திறனாளிகள் நியமிக்கப்பட உள்ளனர்.

அந்தவகையில், முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 9 மாவட்டங்களில் இருந்து மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர்களாக இணைவதற்கு விண்ணப்பம் கடந்த மாதம் 1ம் தேதி முதல் பெறப்பட்டு வந்தன. மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றத்திற்கு உறுப்பினராக நியமனம் செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் வரவேற் கப்பட்டன. மேலும், படிவங்கள் நேரில் மற்றும் இணையதளம் வாயிலாக அனுப்பப்பட்டு கடந்த மாதம் 17ம் தேதி வரை பெறப்பட்டன. இந்நிலையில் நியமன பதவிக்கு எதிர்பார்த்ததை விட அதிகப்படியான விண்ணப்பம் வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நகராட்சி நிர்வாக அதிகாரிகள் தெரிவித்திருப்பதாவது: மாற்றுத்திறனாளிகள் நியமன உறுப்பினர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் முதல்கட் டமாக 9 மாவட்டங்களில் பெறப்பட் டுள்ளன. குறிப்பாக, சில கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விண்ணப்பதாரர்களை உள்ளூர் அதிகாரிகள் ஊக்குவிக்க வேண்டியிருந்தது. மாற்றுத் திறனாளிகள் செயல்படும் இடங்களில் நல்ல வரவேற்பு என்பது கிடைத்தது. இதன் காரணமாக எதிர்பார்த்த எண்ணிக்கையை காட்டிலும் 4,398 பேர் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இதை ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள 5 பேர் கொண்ட குழு பரிசீலனை செய்யும். இவ்வாறு அவர் கூறினார்.

# கன்னியாகுமரியில் மேகமூட்டம் காரணமாக சூரிய உதயம் தெரியாததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

கன்னியாகுமரி, ஆக.04-

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினந்தோறும் வெளி மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இப்படி வருகின்றவர்கள் திரிவேணி சங்கமத்தில் சூரிய உதயத்தை பார்த்துவிட்டு கடலில் புனித நீராடுவர். பின்னர் அங்குள்ள பிரசித்தி பெற்ற பகவதி அம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்கின்றனர். அதன்படி இன்று வார விடுமுறையின் கடைசி நாளை முன்னிட்டு கன்னியாகுமரியில் அதிகாலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.



அவர்கள் சூரிய உதயத்தை பார்க்க திரிவேணி சங்கமத்தில் திரண்டனர். ஆனால் கன்னியாகுமரியில் இன்று அதிகாலை முதலே வானம் மப்பும் மாந்தரமுமாக மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இது நீடித்ததால் கடலில் சூரிய உதயம் தெரியவில்லை. இதனால் திரிவேணி சங்கமத்தில் திரண்டு நின்ற சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இதையடுத்து சுற்றுலா பயணிகள் கடலில் புனிதநீராடி விட்டு பகவதி அம்மன் கோயிலுக்கு சென்று வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து காந்தி, காமராஜர் மண்டபங்கள், காட்சி கோபுரம் உள்ளிட்ட இடங்களுக்கு சென்று சுற்றிபார்த்தனர்.

இதையடுத்து சுற்றுலா பயணிகள் படகு மூலம் கடலில் செல்ல பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக அலுவலகம் நோக்கி விரைந்தனர். அங்கு டிக்கெட் எடுக்க நீண்ட வரிசையில் காத்திருந்ததை பார்க்க முடிந்தது. காலை 8 மணி முதல் வழக்கம் போல் படகுசேவை தொடங்கியது. இதனால் சுற்றுலா பயணிகள் படகில் சென்று விவேகானந்தர் மண்டபம், கண்ணாடி பாலம், திருவள்ளுவர் சிலைகளுக்கு சென்று சுற்றிபார்த்து மகிழ்ந்தனர். சுற்றுலா பயணிகள் குவிந்ததால் கன்னியாகுமரியில் உள்ள பெரும்பாலான கடைகளில் வியாபாரம் சூடிபிடித்தது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161